நிதி (படிகள்)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

கடித எண்.2535/FS/T/படிகள்/2021, நாள்: 07.10.2021

அனுப்புநர்

திரு. S. கிருஷ்ணன், இ.ஆ.ப.,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 09.

பெறுநர்

ஆணையர், கருவூல மற்றும் கணக்குத் துறை,
எண்.571, அண்ணாசாலை,
நந்தனம், சென்னை - 35,
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: படிகள் – அரசாணை (நிலை) எண்.667, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள் 27.06.1989-ன் படி பார்வைத்திறன் குறைபாடு, கை, கால் இயக்க குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு ஊர்திப்படி வழங்குவது குறித்து தெளிவுரைகள் – தொடர்பாக

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.667, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள். 27.06.1989.
2. பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் ஆசிரியர்கள் சங்கம், கடித நாள் 16.12.2020.

---------

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதத்தின் மீது தங்களது கவனத்தை ஈர்க்கிறேன்.

2. அரசாணை (நிலை) எண்.667, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள். 27.06.1989-இன்படி பார்வைத்திறன் குறைபாடு, கை, கால் இயக்க குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஊர்திப்படியில் தற்செயல் விடுப்பு தவிர தன்னிச்சையாக எடுக்கப்படுகின்ற விடுப்புகள்

த.பி.பா

மற்றும் ஏனைய நீண்ட நாள் விடுப்புகளுக்கு (Joining time, Suspension) மட்டுமே பிடித்தம் செய்யப்பட வேண்டும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பள்ளிகளில் காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு, முழு ஆண்டுத் தேர்வு மற்றும் ஏனைய அரசு விடுமுறை நாட்களுக்கு ஊர்திப்படியில் பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்படாத நிலையில், சில பள்ளிகளில் பார்வைத்திறன் குறைபாடு, கை, கால் இயக்க குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் ஊர்திப்படியில் காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு, முழு ஆண்டுத் தேர்வு மற்றும் ஏனை அரசு விடுமுறை நாட்களுக்கு ஊர்திப்படி பிடித்தம் செய்யப்படுகிறது என்று, பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

3. அரசாணை (நிலை)எண்.667, நிதி(ஊதியப்பிரிவு)த் துறை, நாள்.27.06.1989-இன் ஊர்திப்படி பெறுவதற்காக பத்தி எண்.2, வ.எண்.6-ல் The allowance is not payable during leave (except casual leave), joining time or suspension எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே,தற்செயல்விடுப்பைத் தவிர பிற விடுமுறை நாட்களில் பள்ளிக்கல்வித் துறையில் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் காலாண்டு, அரையாண்டு, முழு ஆண்டு விடுமுறை நாட்கள் பணிக்காலமாகக் கருதப்படுவதால் பார்வைத்திறன் குறைபாடு, கை, கால் இயக்க குறைபாடு மற்றும் செவித்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளி ஆசிரியர்களுக்கு ஊர்திப்படி வழங்கலாம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளருக்காக

.10-21.